
அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம் நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944
[அரசு அங்கீகாரம் பெற்றது]

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர்:03 | இதழ்:222 | 4 பக்கங்கள் | 11:03:2026 | புதன்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825



**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

**விளக்கம்:**
ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல்; இஃதொழிந்த கொடையெல்லாம் குறியெதிர்ப்பைக் கொடுத்த நீர்மையாதலையுடைத்து. இது கொடுக்குங்கால் இல்லார்க்குக் கொடுக்கவேண்டுமென்றது.

## "ஈரானிய மக்களால்தான் ஈரானில் ஆட்சி மாற்றம் சாத்தியம்!" - இஸ்ரேல் பிரதமர்



**ஜெருசலேம்:** ஈரானில் ஆட்சியை மாற்றுவது அந்நாட்டு மக்களின் கைகளில்தான் உள்ளது என்றும், அடக்குமுறை அமைப்பில் இருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கி 10 நாட்கள் ஆகின்றன. தொடர்ந்து போர் தீவிரமடைந்து வருகிறது. இதனால், உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இந்தப் போர் தொடருமானால், அது சர்வதேச அளவில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது. இந்நிலையில், இஸ்ரேலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ''ஈரானின் தற்போதைய அரசியல் தலைமையின் எதிர்காலம் அந்நாட்டு மக்களின் கைகளில்தான் உள்ளது. தற்போதைய ஆட்சியை, அடக்குமுறை ஆட்சி என அவர்கள் கூறுகிறார்கள். அத்தகைய அமைப்புக்கு எதிராக எழுந்து நிற்கும் அவர்களின் மனநிலையைப் பொறுத்தே ஈரானில் ஆட்சி மாற்றம் என்பது இருக்கும். ஈரானிய மக்கள் அடக்குமுறை ஆட்சியில் இருந்து விடுபடுவதற்கு உதவுவதே இஸ்ரேலின் நோக்கம். இறுதியில் இது அவர்களிடமே இருக்கிறது. இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் நாம் அவர்களின் சக்தியை பலவீனப்படுத்தி வருகிறோம் என்பதில் சந்தேகமில்லை. அதோடு, நாம் தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

ஈரானிய மக்களுடன் சேர்ந்து நாம் வெற்றி பெற்றால், அவர்கள் தற்போது சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை அளிக்க முடியும். நாம் மாற்றத்தை உருவாக்குவோம். இஸ்ரேலின் சர்வதேச நிலைப்பாட்டிலும் நாம் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி வருகிறோம்'' என தெரிவித்துள்ளார்.

## மதுரையில் சர்வதேச விமான நிலையம் மத்திய அமைச்சரவை ஒப்புதல்




**புதுடெல்லி:** மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.இதுகுறித்துமத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேற்று கூறியதாவது: கோயில்களின் நகரமான மதுரையில் விமான நிலையம் செயல்படுகிறது. இது தமிழகத்தின் பழமையான விமான நிலையங்களில்ஒன்றாகும். சுற்றுலா, ஆன்மிகயாத்திரைகளுக்கு மதுரை விமான நிலையம் மிக முக்கிய இணைப்பாக விளங்குகிறது.பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு வகித்து வருகிறது. முக்கியத்துவம் வாய்ந்த மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் பல்வேறு நாடுகளில் இருந்து மதுரைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பிராந்திய வர்த்தகமும் கணிசமாக அதிகரிக்கும்.சீனா உள்ளிட்ட அண்டை நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு உள்ளன. இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் வருகை தருகின்றனர். இத்தகைய பெருமைமிக்க மதுரையில் உள்ள விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு உலக வரைபடத்தில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. பிரதமர் மோடியின் ஆட்சியில் தமிழக விமான நிலையங்களின் உள்கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, திருச்சி, தூத்துக்குடி விமான நிலையங்களில் புதிய முனையங்கள் திறக்கப்பட்டு உள்ளன. பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்கிறது. கோவை விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்த விமான நிலையத்தில் புதிய முனையம் அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.


# ரூ.156 கோடியில் அலுவலகங்கள், குடியிருப்புகள்: முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்






சென்னை: பதிவுத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவை சார்பில் ரூ.155.81 கோடியில் சார்பதிவு அலுவலகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், அலுவலக கட்டிடங்களை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கோயம்புத்தூர்– கிணத்துக்கடவு, சூலூர், தூத்துக்குடி – ஏரல், விழுப்புரம் - திருவெண்ணைநல்லூர், திருவள்ளூர் – பொன்னேரி, திருப்பத்தூர் - 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சிவகங்கை – திருப்புவனம் என ரூ.14.92 கோடியில் பதிவுத்துறைக்கு கட்டப்பட்டுள்ள 7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்களை முதல்வர் ஸ்டாலின் காணொலியில் திறந்தார். இதுதவிர, கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம், 22 கிராமங்களை உள்ளடக்கி புதிதாக உருவாக்கப்பட்ட பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றையும் முதல்வர் நேற்று திறந்தார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.78 .41 கோடியில் ராமநாதபுரம்- வல்லிமாடன்வலசையில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரம், நாமக்கல், வையப்பமலையில் அமைக்கப்பட்டுள்ள சுப்ரமணியசாமி கோயில் மலைச்சாலை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகக் கட்டிடங்கள், பொது சுகாதார கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்களையும் திறந்தார். இதுதவிர, கோயம்புத்தூர், அவினாசி பிரதான சாலையில் உள்ள வஉசி பூங்காவில் ரூ.50 லட்சம் செலவில் நிறுவப்பட்ட ஜி.டி. நாயுடு சிலையையும் முதல்வர் திறந்தார்.மேலும், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மதுரையில் சுப்பிரமணியபுரம் திட்டப் பகுதியில் ரூ.62.68 கோடியில் கட்டப்பட்ட 396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். கடந்த 5 ஆண்டுகளில் 210 திட்டப் பகுதிகளில் 74,522 அடுக்குமாடி குடியிருப்புகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, தா.மோ. அன்பரசன், மு.பெ.சாமிநாதன், பி.மூர்த்தி, தலைமைச் செயலர் நா.முருகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் நடுக்கோட்டை கிராமத்தில் வசித்து வரும் ஜெயா என்ற ஜெயமணி என்பவருக்கு விஜயராஜ் ராமேஷ் என்ற நபர் வட்டிக்கு பணம் கொடுத்து உள்ளார்கள் அவர்கள் ஒரு எளிய வருமானம் இல்லாத வயதானவர்கள் என்று தெரிந்தும் கந்து வட்டிக்கு ஆசைப்பட்டு பணம் கொடுத்து உள்ளார்கள் கொடுத்த பணத்திற்கு கந்து வட்டியை விட அதிக வட்டி வசூல் செய்து வந்துள்ளார்கள். ஜெயா என்ற ஜெயமணி அவரது கணவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வட்டி பணத்தை செலுத்த முடியவில்லை இதை அடுத்து கந்துவட்டி ராமேஸ் விஜயராஜ் திருமங்கலம் காவல் நிலையம் சென்று அவர்கள் மீது (25/03/2025) புகார் தெரிவித்தனர் இந்த புகாரின் அடிப்படையில் திரு சார்பு ஆய்வாளர் பேச்சிமுத்து பாண்டி (SI) இவர்களை அழைத்து விசாரணை மேற்கொண்டு வட்டிக்கு பணம் கொடுத்த நபர்களிடம் நீங்கள் வட்டிக்கு பணம் கொடுத்து உள்ளீர்கள் அவர்களை மிரட்டலும் தொந்தரவும் செய்யாமல் சட்டப்படி பணத்தை வசூல் செய்யுமாறு அனுப்பி வைத்துள்ளார். ஆனால் மீண்டும் அவர்கள்(11/05/2025) அன்று திருமங்கலம் தாலுகா காவல் நிலையம் சென்று பணத்தை வசூல் செய்து தருமாறு புகார் அளித்ததாக கூறி மக்களை மிரட்டி வந்துள்ளனர். இது குறித்த செய்தித்தாள்களில் செய்திகள் வெளியான நிலையில் அவர்கள் சட்ட விரோதமான செயல்களை கைவிட்டனர் ஆனால் மீண்டும் 09/03/2026 அன்று அவர்கள் வீட்டிற்கு சென்று அவர்களை தகாத வார்த்தைகளாலும் அக்கம் பக்கத்தினர் பார்க்கும் அளவிற்கு அவர்களை அவமானப்படுத்தி கெட்ட வார்த்தைகளால் பேசியும் தற்கொலைக்கும் தூண்டுகிறார்கள் இவர்கள் கூறியதாவது நாங்கள் காவல் துறையும் ஒருபோது மதிக்க மாட்டோம் நீங்கள் கந்து வட்டியை கட்டித் தான் ஆக வேண்டும் என்று வீட்டில் அவமானப்படுத்தி வருகிறார்கள் இதுகுறித்து ஜெயா என்ற ஜெயமணி 100 போலீஸ் புகார் அளித்துள்ளனர் இவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படுமா? சட்ட நடவடிக்கை பாயுமா என்று அப்பகுதி பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்! கிராம பொதுமக்களுக்கு அதீத வட்டிக்கு பணத்தை கொடுத்துவிட்டு செலுத்த தவறியதால் மக்களுக்கு. (ராமேஸ் விஜயராஜ் ) என்ற பெண்மணி எளிய மக்கள் கஷ்ட காலங்களில் வட்டி பணத்தை கொடுக்காத நிலையில் அவர்களை போலீஸ் காவல் நிலையம் பெயரை சொல்லி மிரட்டி வட்டி பணத்தை போலீஸ் மூலம் வசூல் செய்வதாக கூறி பயமுறுத்தி மன உளைச்சலுக்கு ஆளாக்கி எளிய மக்களை தற்கொலைக்கும் தூண்டுகிறார்கள் என்று அப்பகுதி பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்??? காவல் நிலையம் சட்ட ஒழுங்கு. L&O அல்லது கந்துவட்டி வசூல் கும்பலுக்கு செயல்படுகிறதா. என்று சமூக ஆர்வலர்களும் அப்பகுதி பொதுமக்களும் கேள்வி எழுப்பி வருகின்றனர். இவர்கள் மீது அதீத கந்துவட்டி புதிய மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சட்ட மசோதாவில் நிறைவேற்றப்பட்ட சட்டம் எண் 108/2025 இன் படி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ள நிலையில் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது!

# காவல் மரணமாக இருந்தால் கடும் நடவடிக்கை: மானாமதுரை இளைஞர் மரண வழக்கில் நீதிபதி உறுதி



மதுரை / சிவகங்கை: மானாமதுரையில் போலீஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் இறந்தது, காவல் மரணமாக இருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் போலீஸார் தாக்கியதில் உயிரிழந்ததாகக் கூறப்படும் ஆகாஷ் டெல்சனின் தந்தை ராஜேஷ்கண்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் சிபிசிஐடி விசாரணை, உரிய இழப்பீடு, உடற்கூறாய்வு வீடியோ பதிவு உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி, உடற்கூறாய்வை வீடியோவில் பதிவு செய்யவும் ஆகாஷின் உறவினர் நடத்தி வரும் சாலை மறியலை கைவிடவும் உத்தரவிட்டார். இந்நிலையில் நீதிபதி எல். விக்டோரியா கௌரி முன் அரசு வழக்கறிஞர் ஆஜராகி, தேசிய நெடுஞ் சாலையில் நடந்துவரும் மறியல் போராட்டத்தைக் கைவிட நீதிமன்றம் உத்தரவிட்டும் போராட்டம் தொடர்கிறது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை உடனே கலைந்து செல்ல நீதிமன்றம் உத்தரவிட கோரினார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இன்னும் மக்களைச் சிரமப்படுத்தும் வகையில் ஏன் மறியல் போராட்டத்தை நடத்துகிறீர்கள் எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு அரசியல் கட்சிகளே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக் கூறப்பட்டது. பின்னர் நீதிபதி, இதனை வைத்து அரசியல் செய்ய நேரமில்லை. ஒருவேளை அது காவல் மரணமாக இருந்தால் நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கும். ஆகாஷின் பெற்றோர் ஊடகங்கள் வாயிலாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரைக் கலைந்து செல்ல அறிவுறுத்த வேண்டும். விசாரணை நாளை தள்ளிவைக்கப்படுகிறது என்றார்.சிசிடிவி காட்சிகள் ஆய்வுஇதனிடையே இந்த விவாகரம் தொடர்பாக நேற்று மானாமதுரை காவல் நிலையத்தில் சிபிசிஐடி எஸ்பி ஷாஜிதா, ஆய்வாளர்கள் சரவணன், கீதா ஆகியோர் விசாரணை நடத்தினர். அதேபோல், மதுரை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஹரிஹர சுதனும் ஆகாஷ்டெல்சனை கைது செய்த போலீஸாரிடம் விசாரணை நடத்தினார்.உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் காவல் நிலைய சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து பாதுகாக்க, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி, மானாமதுரை நகராட்சி ஆணையர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினரும் காவல் நிலையத்தில் ஆய்வு செய்தனர். மேலும் தேசிய தகவல் மைய அதிகாரிகள் சிசிடிவி காட்சிகளை தனியாக பதிவு செய்து எடுத்துச் சென்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகத்தை திறந்து வைத்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் பங்கேற்றார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி க.சங்கமித்திரை, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பெண் அரசு அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் கேக் வெட்டி கொண்டாடியதுடன் மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.




தக்வா தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி (தென்காசி மாவட்டம்) சார்பாக, வடகரை ரஹ்மானியாபுரம், பண்பொழி , மீனாட்சிபுரம் ரஹ்மத் நகர் ஆகிய ஊர்களில் சுமார் 75 குடும்பங்களுக்கு ஐந்து கிலோ பொன்னி அரிசி வீதம் முதற்கட்டமாக வழங்கப்பட்டது. தக்வா தவ்ஹீத் ஜமாத் பொறுப்பாளர்கள் அகமது மைதீன், முஹம்மது நாகூர், அகமது ராசிக், முஹம்மது யஹ்யா ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# திருவாரூர் மாவட்டம் நீலகுடியில் "தமிழியல் ஆய்வில் புதிய களங்கள்" என்ற தலைப்பிலான 2 நாள் தேசிய கருத்தரங்கின் தொடக்க விழா



திருவாரூர் மாவட்டம் நீலகுடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தமிழியல் ஆய்வில் புதிய களங்கள்" என்ற தலைப்பிலான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கின் தொடக்க விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கி, கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு.கிருஷ்ணன், "எனது பள்ளிப் பருவத்தில் தமிழ் ஆசிரியர் குற்றாலக் குறவஞ்சி பாடத்தை மிகுந்த ஆர்வத்துடன் நடத்தியது ம் என் மனதில் பசுமையாக நிழலாடுகிறது; அந்தப் பெருமை முழுவதும் என் ஆசிரியருக்கே சேரும்," என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், மாணவர்கள் வெறும் பாடத்திட்டத்தைச் சார்ந்து தேர்ச்சி பெறுவதோடு நின்றுவிடாமல், இக்கருத்தரங்கின்தலைப்பிற்கேற்ப தமிழியல் ஆய்வில் உள்ள புதிய பரிமாணங்களைக் கண்டறிந்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அப்போதுதான் புதிய சிந்தனைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்க முடியும் என்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்விழாவில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் கோ. பாலசுப்பிரமணியன், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் புல முதன்மையர் பேராசிரியர் ரவி, தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி. ரமேஷ் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் சு. முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்துச் சிறப்பித்தனர். இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கருத்தரங்கில் மொழியியல், சமூகவியல், நவீன இலக்கியம், கலைகள், இடைக்கால மற்றும் செவ்வியல் ஆய்வுகள், பண்பாடு, இலக்கணம் மற்றும் வரலாறு உள்ளிட்ட பல்வேறு பொருண்மைகளில் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வருகை தந்துள்ள ஆய்வு வல்லுநர்கள் கலந்துகொண்டு தங்களது அரிய கருத்துக் களைப் பகிர்ந்து வருகின்றனர்.

இவ்விழாவிற்கு முனைவர் ச சுபாஷ் வரவேற்புரை வழங்கினார் மற்றும் முனைவர் ரமேஷ் குமார் நன்றி நல்கினார்.




தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பம்பபடையூர் ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள்வாணிபக்கழகநேரடிநெல்கொள்முதல்நிலையத்தில்விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பணிகள் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப அவர்கள் (10.03.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் திரு.நெ.செல்வம் அவர்கள், துணை மேலாளர் திரு. மெய்கண்டமூர்த்தி அவர்கள் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# விளையாட்டு விழா பரிசளிப்பு




மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே தாதம்பட்டி மேட்டுப் பெருமாள் நகர் விஷ்வ பாரதி வித்யா மந்திர் ஆங்கில நர்சரி பிரைமரி பள்ளியில் 29 வது ஆண்டு விளையாட்டு விழா பரிசளிப்பு நடந்தது. இந்த விழாவிற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசன் தலைமை தாங்கி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு விளையாட்டு போட்டிகளை தொடக்கி வைத்து சான்றிதழ் மற்றும் மெடல் பரிசுகள் வழங்கினார். பள்ளி முதல்வர் எஸ் எஸ் குபேந்திரன், துணைத் தாளாளர் சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் சாமில் வரவேற்றார். இந்த விளையாட்டுப் போட்டியில் மாணவ மாணவிகள் நாற்காலி, குடை வடிவ உடற்பயிற்சிகள், பிரமிடுகள், பாட்டிலில் நீர் நிரப்புதல்,சிறுவர் ஓட்டம், உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடந்தது. இதில் ஏராளமான பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் அனிதா நன்றி கூறினார்.

# மன்னாடி மங்கலம் அரசு பள்ளி ஆண்டு விழா



சோழவந்தான் அருகே மண்ணடி மங்கலம் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது விழாவிற்கு வாடிப்பட்டி வட்டார கல்வி அலுவலர் மோசஸ் பெஞ்சமின்தலைமை வகித்தார் வட்டார மேற்பார்வையாளர் பொறுப்பு அலெக்ஸ் பாண்டியன்முன்னிலை வகித்தார் வட்டாரகல்வி அலுவலர்பாண்டியன் துவக்கி வைத்தார் பள்ளி தலைமை ஆசிரியர் பூங்கொடி வரவேற்றார் ஆசிரியை தமிழ்ச்செல்வி ஆண்டறிக்கை வாசித்தார் பயிற்றுனர் சத்யா வாழ்த்தி பேசினார் விழாவில் மாணவ மாணவிகளின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள்நடைபெற்றனவிழாவில் பங்கேற்ற வட்டார கல்வி அலுவலர்கள் பேசுகையில் ஒரு கிராமம் முன்னேற்றம் அடையவும் மாணவ மாணவிகளின்கல்வித்தரம் மேம்படவும் அரசு பள்ளி ஆசிரியர்களின் முக்கிய கடமையாக இருந்து வருகிறது அதில் மண்ணடிமங்கலம் அரசு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர்களின் உன்னதமான கடமையான அயராத உழைப்பால் இங்கு பயின்ற முன்னாள் மாணவர்கள் பலர் தேசிய ராணுவ பணியிலும் மத்திய மாநில அரசுகளின் பல்வேறு பணிகளிலும் உயர்ந்த நிலையில் உள்ளனர் என்பதும் அதனால் கிராமம் முன்னேற்றம் அடைந்து வருவதையும் உணரமுடிகிறது ஆகவே ஒரு கிராம முன்னேற்றத்திற்கு அரசு பள்ளிகளின் ஆசிரியர்களின் பங்களிப்பும் உன்னதமான உழைப்பு முக்கிய காரணம் என்று பாராட்டி பேசினார்கள்பின்பு மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன ஸ்டார் குரூப் சாரிடேபிள் பவுண்டேஷன் டாக்டர் குருசாமி பரிசுகள் வழங்கினார்

இதில் ஜெயக்கொடி பள்ளி மேலாண்மை குழு தலைவர் வசந்தராதேவி பலர் பேசினர் ஆசிரியை காந்திமதி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார் உடற்கல்வி ஆசிரியர் செந்தில் கணேஷ் நன்றி கூறினார் விழாவிற்கான ஏற்பாடுகளை தலைமை ஆசிரியர்பூங்கொடி மற்றும் ஆசிரியர்கள்சுஜாதா செல்வ மனோகரி தங்கம் ரெக்சின் ரோஜா அமுதா சுசிலா சுமதி தையல் ஆசிரியை சம்சாத் உடற்கல்வி ஆசிரியர் மணிகண்டன் கணினி பயிற்றுநர் காயத்ரி சிறப்பாக செய்து இருந்தனர் விழாவில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

# ஆம்பூர் அடுத்த துத்திப்பட்டு ஊராட்சியில் மரக்கன்றுகள் நடும்பணியை ஊராட்சி தலைவர் க.சுவிதா கணேஷ் துவக்கி வைத்தார்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த துத்திப்பட்டு ஊராட்சியில் 250 மரக் கன்றுகள் நடும் பணியை ஊராட்சி தலைவர் க.சுவிதா கணேஷ் துவக்கி வைத்தார். மாதனூர் ஊராட்சி ஒன்றியம் ஆம்பூர் அடுத்த துத்திபட்டு ஊராட்சியில் பழைய மனை பகுதியில் பசுமைபடுத்த மரக்கன்று நடும் பணி துவங்கியது. இதை ஒட்டி நடந்த நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் க.சுவிதா கணேஷ்த லைமை தாங்கி 250 மர கன்றுகள் நடும் பணியை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துணைதலைவர்.விஜய், வார்டு கவுன்சிலர்கள். ஜெயந்தி ராமமூர்த்தி, சுகன்யா, ஜெயப்பிரகாஷ், ஊக்குனர்.ரேகா, மற்றும் 100 நாள் வேலை திட்ட தொழிலாளர்கள்உ ள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்

ஆள்சேர்ப்பு அறிவிப்பு : DR.63/2026./T3/4088/2026.

ஆள்சேர்ப்பு நடைமுறை விதி எண்-110-ன் கீழ் தற்காலிகமாக ஒத்திவைத்தல்

தமிழக அரசு உள்துறை செயலக அடிப்படையில் விதி எண்-110-ன் கீழ் கருணைப்பிரிவு மூலமாக அலுவலக உதவியாளர், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்-II, அடங்கிய பதவிகளை நிரப்புவதற்காக வெளியிடப்பட்ட 16-03-2026 ஆம் தேதியிட்ட ஆள்சேர்ப்பு அறிவிப்பு எண். ந.க.எண் அ1/2678/2025, O.A.77097 மற்றும் ந.க.எண் அ5/3873/2025 செய்தித்துறை அவர்களின் அறிவிக்கை ஆகிய கடித ந.க.எண் கொண்ட அனைத்தும் அலுவலக நிர்வாக காரணங்களுக்காகவும் தமிழக சட்டமன்ற தேர்தல் 2026 நடைமுறை விதிகள் மற்றும் 16-03-2026 அன்று நடைபெறும் மாநிலங்களவை தேர்தல்கள் அறிவிப்பாணை முன்னிட்டும், அரசு அலுவலர்கள் மனுதாரர் வீடுகளுக்கு நேரிடையாக சென்று களஆய்வு மேற்கொள்வதற்காகவும் இது தொடர்பாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையிலும் இதற்கான பணிகளை மேற்கொள்ள கால அவகாசம் தேவை என்பதால் இந்த தேர்வு வருகின்ற 16.03.2026 அன்று நடைபெற இருந்த நேர்காணல் விதி எண் 110-ன் கீழ் அலுவல் முறையாக அனைத்து நேர்காணல்களும் 08- வாரங்களுக்கு மட்டும் ரத்து செய்யப்படுகிறது என நாளிதழ்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மறுதேதி பிறகு அறிவிக்கப்படும். 08-வாரங்களுக்கு பிறகு நிதிநிலை அலுவலக அனுமதி பெற்று நேர்காணல் நடத்தப்படும் என்றும் நேர்காணல் நடைபெறும் அன்றே மாலை வேளையில் பணி நியமன ஆணை வழங்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

Davpe 77097/678/001/2026
06-03-2026

இயக்குநர்
(ஆள் சேர்ப்பு)
தலைமை அலுவலகம்
தலைமை செயலகம்
சென்னை-09.

# ஊட்டி பேருந்து நிலையம் அருகே அறிவியல் பூங்கா திறப்பு. மாணவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் ஆர்வம்!!!



நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் நகரில், ஊட்டி பேருந்து நிலையம் அருகே அமைந்திருந்த சிறிய பூங்கா நீண்ட காலமாக திறக்கப்படாமலும் முறையாக பராமரிக்கப்படாமலும் இருந்தது. இதனால் அந்த பகுதி இரவு நேரங்களில் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறியதாக பொதுமக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்தனர். பூங்காவை சீரமைத்து மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் பூங்காவை புதுப்பித்து, தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் வகையிலும், குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அறிவியல், தொடர்பான விஷயங்களை எளிதாக அறிந்து கொள்ளும் வகையிலும் அதை அறிவியல் பூங்காவாக மாற்ற முடிவு செய்தது.

அதன்படி ரூபாய் 2 கோடியே 17 இலட்சம் மதிப்பில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பூங்கா முழுவதும் வளர்ந்து இருந்த முட்புதர்கள் அகற்றப்பட்டு, பல்வேறு அறிவியல் சார்ந்த விளக்க அமைப்புகள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையிலான விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ராக்கெட் செயல்படும் முறை, கார் இயங்கும் விதம், டைனோசர் போன்ற பழங்கால விலங்குகளின் மாதிரிகள் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அவற்றை எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு அமைப்பின் அருகிலும் விளக்கக் குறிப்புகளுடன் பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

அறிவியல் பூங்கா அமைக்கும் பணிகள் தொண்ணூறு சதவீதத்திற்கும் மேல் நிறைவடைந்த நிலையில், தற்போது அது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவியல் பூங்காவை உதகை நகராட்சி தலைவி வாணீஸ்வரி மற்றும் நகராட்சி துணைத் தலைவர் ஜெ.ரவிக் குமார் ஆகியோர் இணைந்து குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தனர்.

இந்த அறிவியல் பூங்கா சுற்றுலாப் பயணிகள், குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என அனைத்து தரப்பினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# குத்தாலத்தில் சாலையை சீரமைக்க வலியுறுத்தி கிராம மக்கள் மறியல் போராட்டம்; போக்குவரத்து பாதிப்பு



குத்தாலத்தில் சேதமடைந்த சாலையை சீரமைக்க வலியுறுத்தி கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

★சாலை மறியல்★

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் குத்தாலம், கோபுராஜபுரம், நரிமணம் ஊராட்சி பகுதிகளில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அப்பகுதி பொதுமக்கள் திட்டச்சேரி மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வர குத்தாலம் திட்டச்சேரி ஓஎன்ஜிசி சாலையை பயன்படுத்தி வருகின்றனர். இந்த சாலையில் ஜல்ஜீவன் மிஷன் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது. குழாய் பதிக்கும் பணிகள் ஆங்காங்கே முடிவடைந்த நிலையில் சாலை சீரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் சாலையில் சென்று வர முடியாமல் அவதிப்படுகின்றனர். இந்த நிலையில் நேற்று திடீரென பெய்த மழையில் சாலை முழுவதும் சேரும் சகதியுமாக மாறியது. இதனால் பொதுமக்கள் சென்றுவர முடியவில்லை எனக் கூறி குத்தாலம் மெயின் ரோட்டில் டேங்கர் லாரிகளை மறித்து கிராம மக்கள் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து தகவல் இருந்த திட்டச்சேரி போலீசார் மற்றும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்ட அலுவலர்கள் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இந்த மறியலில் சுமார் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# வேலூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்களின் தாகம் தணிப்பதற்காக விரைவில் குடிநீர் தொட்டிகள் வைக்கப்பட உள்ளது என மாநகராட்சி அதிகாரிகள் தகவல்

தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. தினமும் அதிகரித்து வரும் வெயிலால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் பெரும் அவதி அடைந்துள்ளனர். வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் தான் சூரியன் உக்கிரமாக இருக்கும். ஆனால் இந்தாண்டு பிப்ரவரி மாத கடைசி முதலே வெயில் சுட்டெரிப்பதால் பொதுமக்கள் பகல் வேளையில் வெளியே செல்லாமல் வீட்டிற்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்களை வாட்டி வதைக்கும் வெயிலில் இருந்து தப்பிக்க மோர், இளநீர், தர்பூசணி,பழரசம்போன்றவற்றைபொதுமக்கள் வாங்கி பருகுகின்றனர்.

இந்நிலையில் வேலூர் மாவட்டத்தில் கோடை வெயில் இப்பொழுதே சுட்டெரித்து வருவதால் பொதுமக்களின் தாகம் தணிக்க முக்கிய இடங்களில் தண்ணீர் தொட்டி மற்றும் போக்குவரத்து சிக்னல்களில் பசுமை பந்தல் அமைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் வேலூர் மாநகராட்சி பகுதியில் பொது மக்களின் தாகம் தணிக்க குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட உள்ளது. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், வேலூரில் மாநகரில் வழக்கத்தை விட இந்தாண்டு மார்ச் மாத தொடக்கம் முதலே சூரியன் சுட்டெரித்து வருகிறது. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து நிலையங்கள், மாநகராட்சி நிர்வாகம் சார்பில் இந்த மாத இறு தியி தியில் போக்குவரத்து சிக்னல் களில் பசுமை பந்தல் மற்றும் பேருந்து நிறுத்தங்கள் மார்க்கெட் ஆகிய பகுதிகளில் குடிநீர் தொட்டிகள் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதே கத்திரி வெயில் போன்று வெயில் சுட்டெரிக்கிறது.

எனவே இரண்டொரு நாட்களில் வேலூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்களின் தாகம் தணிக்க குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட உள்ளது. எந்தெந்த பகுதியில் குடிநீர் தொட்டிகள் வைக்கலாம் என்று மாநகராட்சி ஊழியர்கள் கணக்கெடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கலந்தாலோசித்து அங்கு குடிநீர் தொட்டிகள் வைக்கப்படும். அதைத்தவிர வேலூர் கிரீன்சர்க்கிள், மக்கான், நேஷ்னல் சர்க்கிள், திருமலைதிருப்பதி தேவஸ்தான தகவல் மையம் அருகே போக்குவரத்து சிக்னல்களில் தனியார் அமைப்புகளுடன் இணைந்து பசுமை பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

தினகனி



# தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் கிரிக்கெட் திருவிழா: மேயர் எஸ்.பி கலெக்டர்கள் பங்கேற்பு



தூத்துக்குடி டி20 உலக கோப்பைகிரிக்கெட்போட்டி இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள நாடுகள் பரப்பரப்பாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்தியா நியூசிலாந்து கிரிக்கெட் போட்டி பரபரப்பாக விளையாடப்பட்ட நிலையில் ஆரம்பகட்டத்தில் இந்தியாவின் வேகமும் பின்னர் சற்று பின்னடைவும் ஏற்பட்ட நிலையில் உலக கோப்பையை இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றாக வேண்டும் என்று இந்திய அணியின் கேப்டன் தலைமையில் வீரர்கள் அணி வகுத்து நின்ற நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி முத்துநகர் கடற்கரையில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் மாநகராட்சி மேயருமான ஜெகன் பெரியசாமி அகண்ட திரையில் பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்து அனைவருக்கும் இருக்கைகளையும் ஏற்பாடு செய்து அவரது தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதன் மாநகராட்சி ஆணையர் ப்ரியங்கா, கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா கூடுதல் கலெக்டர் பயிற்சி புவனேஸ்ராம், துணை கலெக்டர் பயிற்சி மகேந்திரன், கோட்டாட்சியர் பிரபு மாவட்ட வன அலுவலர் இளைய ராஜா உள்ளிட்டோர் அமர்ந்திருந்து கிரிக்கெட் திருவிழாவை கண்டுகளித்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

பின்னர் மேயர் ஜெகன் பெரியசாமி கூறுகையில் திமுக தலைவரும தமிழக முதலமைச்சருமானஸ்டாலின், பொறுப்பேற்ற பின் தமிழகம் எல்லாத்துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. அதே போல் மாநில இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டு துறை துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றபின்இந்தியாவிற்கேவிளையாட்டிற்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. பல்வேறு வகையில் பல விளையாட்டு போட்டிகளுக்கு ஊக்கமளித்து அரசு நிதியுதவியும் அளிக்கிறது. அதே வழியில்தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் பொறுப்பேற்ற நான்காண்டுகளில் பொதுமக்கள் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு கைப்பந்து கால்பந்து பூப்பந்து கிரிக்கெட் என பல்வேறு விளையாட்டுகளை அனைவரும் விளையாடும் வகையில் பூங்காவுடன் கூடிய விளையாட்டு திடல்கள் அமைத்து கொடுத்துள்ளோம் அதே போல் பெண்களுக்கும் தனிபூங்காக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கேற்றாற்போல் உடற்பயிற்சி கூடத்துடன் அதையும் அமைத்து கொடுத்துள்ளோம் இப்படி அனைவருக்குமான திட்டங்களை உருவாக்கி அதை நல்லமுறையில் நடைமுறைப்படுத்தி மக்கள் நலனை பாதுகாத்து வருகிறோம் கிரிக்கெட் என்பது பலர் நேரடியாக பார்ப்பதும் சிலர் இந்தியா வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு கடந்து செல்வதும் இருந்து வரும் நிலையில் தூத்துக்குடி ரசிகர்களின் வேண்டுகோளை ஏற்று இந்த கிரிக்கெட் திருவிழாவை ஏற்பாடு செய்தோம் அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டவர்களோடு நாங்களும் மகிழ்ச்சியாக பார்த்தோம் இறுதி வெற்றி இந்தியாவிற்கு என்ற மகிழ்ச்சியான செய்தியோடு நாளைய தமிழகமும் தமிழக முதலமைச்சரின் 2.0 திட்டத்தின் கீழ் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம். என்ற இலட்சியத்தோடு பணியாற்றி வருகிறோம். என்று கூறினார்.

மாநகரமீனவரணி அமைப்பாளர் டேனியல் கவுன்சிலர்கள் பவாணி வைதேகி சுப்புலட்சுமி ஜெயசீலி மெட்டில்டா ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ் வட்டச்செயலாளர் ரவீந்திரன் மின்வாரிய தொழிற்சங்க தலைவர் பேச்சிமுத்து உள்பட கிரிக்கெட் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

# உணவு தேடி வருவாய் அலுவலரின் குடியிருப்புக்கு வந்த புள்ளிமான்



கிருஷ்ணகிரி: உணவு தேடி கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலரின் குடியிருப்புக்குள் புகுந்த புள்ளிமானால் பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் வருவாய் அலுவலர் குடியிருப்பு அமைந்துள்ளது. இங்குள்ள தோட்டத்தில் திங்கள்கிழமை மான் மேய்வதைக் கண்ட பணியாளர்கள், வனத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். நிகழ்விடத்துக்கு வந்த வனக்காவலர் கணபதி மற்றும் ஊழியர்கள் மானை பிடிக்க முயற்சி செய்தும் முடியவில்லை. பின்னர், தீயணைப்பு மற்றும் மீட்பு படை வீரர்கள் வந்து மானை பிடிக்க முயன்றனர். நீண்ட நேரமாகியும் மானை அவர்களால் பிடிக்க முடியவில்லை. இந்நிலையில், குடியிருப்பு சுற்றுச்சுவரை தாண்டி மான் தப்பியோடியது. பின்தொடர்ந்து சென்ற தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர், மான் சாமந்தமலை காப்புக் காட்டுக்கு சென்றுவிட்டதாக தெரிவித்தனர்.

# திருப்பூர் வடக்கு SDPI கட்சியின் சார்பாக இப்தார் நிகழ்ச்சி




எஸ் வி காலணியில் உள்ள ராஜா மினி மஹாலில் நடைபெறுகின்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தரும் SDPI கட்சியின் மாநில பொருளாளர் A. முஸ்தபா அவர்களையும் SDPI கட்சியின் மாவட்ட தலைவர் J. பஷீர் அகமது அவர்களையும்!!! திருப்பூர் மாநகர மேயர் N. தினேஷ் குமார் அவர்களையும் திருப்பூர் இரண்டாம் மண்டல தலைவர் தம்பி ஆர் கோவிந்தராஜ் அவர்களையும்!!! மற்றும் மாவட்ட நிர்வாகிகள், தொகுதி நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம் என திருப்பூர் வடக்கு எஸ் டி பி ஐ கட்சியின் சார்பாக கூறப்பட்டுள்ளது

# கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு துணை முதல்வர் மார்ச். 13 வருகை: முன்னேற்பாடுகள் தீவிரம்



கிருஷ்ணகிரி

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கிருஷ்ணகிரிக்கு மார்ச் 13ஆம் தேதி வருகைதர உள்ளதையொட்டி, முன்னேற்பாடு பணிகளை அரசு அலுவலர்கள் செய்து வருகின்றனர். கிருஷ்ணகிரியில் மார்ச் 13ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்க தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகிறார். இதையொட்டி, கிருஷ்ணகிரி அருகே உள்ள சுங்கவசூல் மையத்தை அடுத்துள்ள மைதானத்தில், அரசு விழா நடைபெற உள்ளது. இந்த விழாவில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்துவைக்கிறார். மேலும், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளார். இதையொட்டி, விழா நடைபெறும் மைதானத்தில் முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளை கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சாதனைக்குரல் நேரில் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் அபிநயா உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# திருப்பூர் பல்லடம் தொகுதிக்கு கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் விருப்பமனு



திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் மாநகராட்சி நான்காவது மண்டல தலைவருமான இல. பத்மநாபன் அவர்கள் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் பல்லடம் தொகுதியில் போட்டியிடுவதற்கான தனது விருப்ப மனுவை திமுக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் பாரதி அவர்களிடம் வழங்கினார் இந்த நிகழ்வின் போது திமுக துணை பொது செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# சர்வதேச மகளிர் தினம் முன்னிட்டு அஸ்மிதா லீக் கேலோ இந்தியா, சாய், மை பாரத் கேந்திரா சார்பில் பெண்களுக்கு 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் போட்டி







ஈரோடு மாவட்டம், சர்வதேசமகளிர்தினம்முன்னிட்டு அஸ்மிதா லீக் கேலோ இந்தியா, சாய், மை பாரத் கேந்திரா சார்பில் பெண்களுக்கு 100மீட்டர், 200மீட்டர், 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் போட்டி நடத்தப்பட்டது. இதில் சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வமாக பங்குபெற்றனர். பங்குபெற்ற அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ், வெற்றி பெற்றவர்களுக்கு மெடல் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி ஈரோடு மாவட்ட இளையோர் அலுவலர் ட்ராவின் சார்லஸ்டன் தலைமையில் ஈரோடு மாவட்டம் SDAT இல் நடைபெற்ற இந்தப் போட்டிகளுக்கு அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் ஈரோடு தி வேல்ஸ் அகாடமி சேர்ந்த மாணவிகள் சுமார் 40க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்றனர். ஒட்டுமொத்த போட்டிகளில் சிறந்து விளங்கிய இரண்டு மாணவிகளுக்கு மெடல் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் சில விளையாட்டுப் போட்டிகள் நடத்தி சிறப்பு பரிசுகள் வழங்கினார்கள்.

# கிருஷ்ணகிரி அருகே முதியவரை கொன்று நகை பணம் கொள்ளை



ஊத்தங்கரை: கிருஷ்ணகிரி அருகே முதியவரை கொன்று நகை பணத்தை கொள்ளையடித்த மர்ம நபரை போலீஸார் தேடி வருகின்றனர். மேலும், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான அவரது மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையை அடுத்த உப்பு வலசை கிராமத்தைச் சேர்ந்தவர் கண்ணப்பன் (70). இவருடைய மனைவி சென்னம்மாள் (60). இவர்களுக்கு ஒரு மகன், இரண்டு மகள்கள் உள்ளனர். மகள்களுக்கு திருமணமாகிவிட்ட நிலையில், மகன் திருமணமாகி குடும்பத்துடன் கோயம்புத்தூரில்கொத்தனார்தொழில் செய்துவருகிறார். கண்ணப்பன் தனது மனைவியுடன் தோட்டத்தில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந்தார். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு கண்ணப்பன் வழக்கம்போல வீட்டின் வெளியே கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது, அடையாளம் தெரியாத மர்ம நபர் கண்ணப்பன் தலைமீது கல்லைப் போட்டு தாக்கியுள்ளார். அவரது அலறல் சப்தம் கேட்டு வெளியே வந்த அவரது மனைவி சென்னம்மாளை மர்ம நபர் தாக்கி பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு அங்கிருந்து தப்பியுள்ளார். சென்னம்மாளின் அலறல் கேட்டு அப்பகுதியில் இருந்தவர்கள் சிங்காரப்பேட்டை காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீஸார், அவர்கள் இருவரையும் மீட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதில், தலையில் பலத்த காயமடைந்த கண்ணப்பன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மூதாட்டி சென்னம்மாள் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த சேலம் சரக டிஐஜி சந்தோஷ் ஹதிமணி, இ.கா.ப மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பெ.தங்கதுரை.இ.கா.ப ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும், மர்ம நபரை பிடிக்க கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நமசிவாயம் தலைமையில் 5 தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர். சம்பவ இடத்தில் தடயவியல் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் கொண்டு தடயங்களை சேகரித்து வருகின்றனர். இதுகுறித்து சிங்காரப்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தமிழக சட்ட மன்ற தேர்தலை முன்னிட்டும் நேர்காணல்கள் தற்காலிகமாக ஒத்திவைப்பு செய்வதற்கான அறிவிப்பு

செய்தி வெளியீட்டு எண்: 49/2026 நாள்: 06.03.2026.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடைபெற இருந்த குரூப் - 2A, குரூப்-4, நிலை பதவிக்கான சான்றிதழ் சரிபார்ப்பு நேர்முகத் தேர்வானது வருகின்ற 16-03-2026 முதல் 23-03-2026 ஆம் தேதி வரை தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும் என 20-01-2026- ன் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டது. தற்போது மேன்மை தாங்கிய இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிவிக்கையின் படி தமிழக சட்டமன்ற தேர்தல் மற்றும் மாநிலங்களவை தேர்தல்களையும் முன்னிட்டும் தேர்வாளர்கள் அவர்களுடைய பதிவெண்கொண்ட முடிவுகள், சான்றிதழ் சரிப்பார்ப்புகள் அனைத்தும் தமிழக தலைமை தேர்தல் ஆணையம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதால் அலுவல் சார்ந்த அனைத்தும் தமிழக தலைமை தேர்தல் ஆணையம் ஒப்புதலுக்குப் பிறகு அலுவலக செயலியில் பதிவேற்றப்படும். குரூப் - 2A, குரூப்-4, நிலை பதவிக்கான 16.03.2026 முதல் 23.03.2026 வரை நடைபெறுவதாக இருந்த நேர்முகத் தேர்வுகள் சான்றிதழ் சரிபார்ப்புகள் ஆகியன தேர்தல் நடைமுறை விதிகள் அமல்படுத்தப்படுவதாலும், அலுவலக நிர்வாக காரணங்களுக்காவும், அதிகாரிகளின் பணியிடை மாற்றத்தாலும் தேர்தல் விதிமுறைகள் காரணங்களுக்காகவும் - 10 வாரங்களுக்கு மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பு ஒத்திவைக்கப்படுகிறது எனவும் தேர்வாளர்கள் தங்களுடைய தர வரிசை பட்டியலின் படி – 10-வாரங்களுக்குப் பிறகு நேர்முகத் தேர்வுகளில் கலந்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மறுதேதி பின்னர் தெரிவிக்கப்படும் தேர்வாளர்கள் ஆகிய தாங்கள் தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் இருந்து நீங்கிய பிறகு தரவரிசைபட்டியல்கள், நேர்காணல்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும் என்றும் தேர்வாளர்கள் ஆகிய தாங்கள் TNPSC041320/2026- எண் கொண்ட (பயனர் ஐடி) User Idயையும், கடவுச்சொல்லாக (Password-ஆக தேர்வாளர்களுடைய பிறந்த தேதியையும் குறியீட்டு, சான்றிதழ்கள் அனைத்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவுறுத்தப்படுகிறது.

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க ஸ்டாலின் அவர்கள் (10.03.2026) சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், மறு கட்டுமானத் திட்டத்தின் கீழ் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரத்தில் ரூபாய் 62.68 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 396 (S+9) அடுக்குமாடி குடியிருப்புகளை பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்கள்அ தனை தொடர்ந்து மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பயனாளிகளுக்கு வீட்டிற்கான ஆணை மற்றும் சாவியை வழங்கி குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்மா நகராட்சி ஆணையாளர் திரு சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள்,மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# திருமருகல் ஒன்றியத்தில் திடீரென பெய்த கனமழை; கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்தது



திருமருகல் ஒன்றியத்தில் திடீரென பெய்த கன மழை

கொள்முதல் நிலையங்களில்வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்தது

திருமருகல் ஒன்றியத்தில் திடீரென பெய்த கனமழையால் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள்மழையில்நனைந்தது.

★திடீரென பெய்த கனமழை★

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றிய பகுதிகளான திட்டச்சேரி, திருமருகல், திருக்கண்ணபுரம், நரிமணம், குத்தாலம், கோபுராஜபுரம், பனங்குடி, சீயாத்தமங்கை, கட்டுமாவடி, அண்ணாமண்டபம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று காலை திடீரென வானில் கருமேகங்கள் சூழ்ந்து கன மழை கொட்டித்தது. இந்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

★நெல் மூட்டைகள் நனைந்தது★

மேலும் திடீரென பெய்த மழையால் விவசாயிகள் சம்பா அறுவடை பணிகள் செய்து விற்பனைக்காக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் நனைந்து சேதமாகி உள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்: விவசாயிகள் சம்பா நெல் அறுவடை செய்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வந்து விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்ட நிலையில் 10 முதல் 15 நாட்கள் வரை டோக்கன் வழங்காமலும், நெல் மூட்டைகள் தேங்கி கிடப்பதால் போதிய இடவசதி இல்லை எனவும், நெல் கொள்முதல் பணிகளில் அலட்சியம் காட்டுகின்றனர். இந்த அலட்சியத்தால் திடீரென பெய்த மழை பல்வேறு பகுதிகளில் அடிக்க வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை முழுவதும் நனைந்து சேதமடையும் நிலை உள்ளது. குறிப்பாக மானாம்பேட்டை, சீயாத்தமங்கை, திருக்கண்ணபுரம், திருமருகல், அண்ணா மண்டபம், அம்பல், பொறக்கொடி, சேஷமூலை, அகரக்கொந்தகை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தநெல்மூட்டைகள்நனைந்துள்ளது. எனவே அரசு நெல்லுக்கான ஈரப்பதத்தை தளர்த்தி 22 சதவீதம் வரை நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருப்பூரில் சிஆர்பிஎப் வீராங்கனைகள் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு விரைவில் அறிவிப்பு வெளியாக உள்ள நிலையில் திருப்பூர் பகுதிக்கு பாதுகாப்பு பணிகளுக்காக சிஆர்பிஎப் வீராங்கனைகள் வந்துள்ளனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக, பதிவுத்துறையின்சார்பில்புதியசார்பதிவாளர்அலுவலகம்திறந்துவைத்ததைதொடர்ந்து, தருமபுரி பதிவு மாவட்டம், பாப்பாரப்பட்டியில் புதிய சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கவிதா அவர்கள், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி அவர்கள் முன்னிலையில் நேற்று குத்து விளக்கு ஏற்றி வைத்து பார்வையிட்டார் கள்.உடன் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, சேலம் மண்டல துணை பதிவுத்துறைத் தலைவர் சுபிதாலட்சுமி, தருமபுரி மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) வெங் கடேசன், மாவட்ட பதிவாளர் (தணிக்கை) கனகராஜ், பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் சக்தி வேல், பாப்பாரப்பட்டி பேரூராட்சித் தலைவர் டி.பிருந்தா, பேரூராட்சித் செயல் அலுவ லர்ஆ யுஷா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 07.01.2025அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கந்தப்பகவுண்டன்வலசில் ரூ.1250.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு மைதா னத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானத்தில் குத்துவிளக்கேற்றி விளையாட்டு வீரர்க ளின்பயன்பாட்டிற்குதிறந்து வைத்தார். அருகில், ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் திருமதி.சுவேதா, ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியாளர் திரு.சுப்பிரமணிய பிரபு, வட் டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரபு பாண்டியன், திரு.காமராஜ், ஒட்டன்சத்திரம் உதவி செயற்பொறியாளர் திரு.ஜெயக்குமார், பொறியாளர் திருமதி.ஸ்ரீநிதி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர் (மதுரை) திருமதி.சந்திரா, மேற்பார்வை பொறியா ளர் (திண்டுக்கல்) திரு.சைமன் சார்லஸ், செயற்பொறியாளர் (பழனி) திரு.சந்திரசேகரன், திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.ஆர்.சிவா, தொப்பம்பட்டி விளை யாட்டு அரங்க அலுவலர் திரு.பி.சுப்பிரமணி அவர்கள் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச்செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட ஆதியூர் பகுதியில், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் சார்பில், ரூ.2.189 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலக கட்டடம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சுற்றுலா மாளிகை அருகில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகம் ஆகிய கட்டடங்களை திறந்து வைத்ததை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.நாராயணன் அவர்கள் பார்வையிட்டார்கள். உடன் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை டாக்டர் உமாமகேஸ்வரி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.விஜயகுமாரி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு.குணசேகரன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் திரு.எஸ்.ராஜேந்திரன், துணைப் பதிவுத்துறை தலைவர் திரு. அருள்சாமி,உதவிபதிவுத்துறைதலைவர்செல்வி.வாணி,மாவட்டபதிவாளர்(தணிக்கை) திரு.செந்தூரப்பாண்டி, சார்பதிவாளர் திருமதி.சர்மிளா, செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை திரு.அண்ணாதுரை, திருப்பத்தூர் வட்டாட்சியர் திரு.நவநீதன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (10.03.2026) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், வள்ளிமாடன் வலசை கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட பெரியார் நினைவு சமத்துவப்புரத்தை காணொளிக்காட்சிகளின் மூலம் திறந்து வைத்ததையொட்டி, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. திவ்யான்ஷுநிகம்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.சங்கரநாராயணன் அவர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.குணால் உத்தம் ஷ்ரோதே.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்.

# சேலம் வாழப்பாடியில் திருமண வரவேற்பு விழா



சேலம் மாவட்டம் ஏத்தாப்பூர் ஜி. நடராஜன் ,வி. கவிதாதம்பதியரின்மகள்என்.தேவிசுதந்திராவிற்கும், டி குருசாமி ,மாலதி தம்பதியரின் மகன் ஜி அக்சைக் கும் திருமண வரவேற்பு விழா முன்னாள் மத்திய மந்திரி வாழப்பாடியார் திருமண மண்டபத்தில் நடை பெற்றது. உயிர்மெய்த் தமிழ்ச்சங்கம், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் மாநில தலைவர் சேலத்து பாரதி சொல்லரசர், ,கவிஞர் வீரமணியரசு, கவிஞர் வாழப் பாடி பெரியார் மன்னன், கவிஞர் வீரகனூர் ரவிச்சந்தி ரன், கவிஞர் மா. புகழேந்தி ஆகியோர் மணமக்க ளுக்கு நினைவுப் பரிசளித்து மணமக்களை வாழ்த்தி னர்

# ஊரீசு கல்லூரி 42வது பட்டமளிப்பு விழா




வேலூர் ஊரீசு கல்லூரியின் 42வது பட்டமளிப்பு விழா கல்லூரியின் டிபோயர் வளாகத்தில் அமைந் துள்ள டாக்டர் ஜெயகரன் ஐசக் உள் அரங்கில் கல்லூ ரியின் தலைவர் மற்றும் செயலாளருமான வேலூர் சிஎஸ்ஐ பேராயர் ஹென்றி ஷர்மா நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு காவல்துறை இயக்குனர் (ஓய்வு) டி.கே.இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 26 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து சான்றிகழ்களை வழங்கி னார்.

இதில் 679 இளநிலை மற்றும் 171 முதுநிலை மாண வர்கள் என மொத்தம் 876 மாணவர்கள் பட்டம் பெற் றனர். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஜே. ஆனி கமலா, நிதியாளுநர் டாக்டர் ச.காலேப் நோபுள் சந்தர் முன்னிலை வகித்தனர். விழா முடிவில் ஒருங் கிணைப்பாளர் முனைவர் எடிசன் நேசதாஸ் நன்றி யுரை தெரிவித்தார்.

# மதுரை மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் அறிவது

எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பாது காப்புப் பணிக்கு சிறப்பு காவலர்களாக முன்னாள் இளநிலைபடை அலுவலர்கள் (JCO's) மற்றும் முன் னாள் படைவீரர்கள் (ORs) ஈடுபடுத்தப்பட உள்ளார் கள். எனவே, தேர்தல் பாதுகாப்பு பணிக்குச் செல்ல விருப்பமுள்ள மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 65 வய துக்குட்பட்ட முன்னாள் படைவீரர்கள் தங்களது அசல் படைவிலகல் சான்று, அடையாள அட்டை, ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அட்டை நகலு டன், முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலு வலகத்தினைநேரில்அணுகிதங்களதுவிருப்பத்தினை தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித் துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம்.. பழனி அருள்மிகு தண்டாயுத பாணி திருக்கோயிலில் பழனி தாலுகா வேலம்பட்டியை சேர்ந்த கவிதாராமகிருஷ்ணன் மற்றும் ஒட்டண்சத்திரம் மண்டவாடியே சேர்ந்த லாவண்யா ஆகிய இரண்டு நபர்கள் அன்னதானதிட்டத்திற்குநன்கொடையாகரூ7,00,000(ஏழு இலட்சம் ) வழங்கி தமிழ்நாடு இந்து அறநிலயத்துறையின் வைர அட்டையை பழனி திருக்கோயிலின் இணை ஆணை யர் மாரிமுத்து அவர்களிடம் பெற்றுக்கொண்டனர்,இந்த வைர அட்டை என்பது 7,00,000(ஏழு இலட்சம் ) அன்ன தானதிட்டத்திற்குநன்கொடையாகவழங்கினால்அவர்கள் தமிழ் நாட்டில் இந்து சமயஅறநிலய த்துறையின் கட்டுப் பாட்டில் உள்ள கோவில்களில் 7 நபர்கள் வீதம் தொடர்ந்து 20 வருடங்கள் சாமி தரிசனம் செய்ய முன்னுரிமை வழங் கப்படும்.இதுவரை பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் 26 நபர்கள் வைர அட்டை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

# சிறுநீரக ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த "ரொம்ப உப்பு... ரொம்ப ரொம்ப தப்பு" பிரச்சாரத்தை துவக்கிய ஏஐஎன்யு மருத்துவமனை




உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு, சென்னையில் உள்ள ஆசியன் இன்ஸ்டிடி யூட் ஆப் நெப்ராலஜி அன்ட் யூராலஜி (ஏஐஎன்யு), அன் றாட உணவில் அதிகமாக உப்பு சேர்ப்பதால் ஏற்படும் மறைமுக ஆபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் சிறுநீரக பாதிப்புகள் குறித்தும் விளக் கும் வகையில் "ரொம்ப உப்பு... ரொம்ப ரொம்ப தப்பு" என்ற விழிப்புணர்வு பிரச்சா ரத்தைத் தொடங்கியுள்ளது.

இந்தப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, நோய்களை முன் கூட்டியே கண்டறிந்து தடுக் கும் நோக்கத்துடன், 30 வய துக்கு மேற்பட்டவர்களுக்கு மார்ச் 12 முதல் மார்ச் 31 வரை இலவச சிறுநீரக பரிசோத னையை இம்மருத்துவமனை மேற்கொள்ள உள்ளது.

அதிக உப்பு உட்கொள்வ தால், உயர் ரத்த அழுத்தம் மற் றும் சிறுநீரக நோய் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்ப டுத்துவதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும். அதிகப்படியான உப்பை உட்கொள்வது ரத்த அழுத்தம் அதிகரிப்ப தற்கும் மற்றும் நீண்டகால உயர் ரத்த அழுத் தத்திற்கும் முக்கிய காரணமாகும். இதுவே சிறுநீரக பாதிப்பு மற்றும் நாள்பட்ட சிறுநீ ரக நோய்க்கு வழிவகுக்கிறது.

இம்மருத்துவமனையின் சிறுநீரக மருத் துவ நிபுணர் டாக்டர் எம். நவிநாத் இது குறித்து கூறுகையில், "நமது அன்றாட உண வில் நாம் சாதாரணமாகச் சேர்க்கும் அதிகப் படியான உப்பு, காலப்போக்கில் சிறுநீரகங்களை பாதிக்கும் என்பது பலருக் கும் தெரிவதில்லை. அதிக உப்பு ரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது. கட்டுப்பா டற்ற உயர் ரத்த அழுத்தமே நாள்பட்ட சிறு நீரக நோய்க்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். 'ரொம்ப உப்பு... ரொம்ப ரொம்ப தப்பு' என்ற இந்த பிரச்சாரத்தின் மூலம், உணவில் செய்யும் சிறிய மாற்றங்க ளும், முறையான மருத்துவப் பரிசோதனை களும் சிறுநீரக ஆரோக்கியத்தைப் பாது காக்க பெரிதும் உதவும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புகிறோம். சிறுநீரக நோயானது முற் றிய நிலையை அடையும் வரை எந்த அறி குறியும் இல்லாமல் இருக்கும் என்பதால், இதனை முன்கூட்டியே கண்டறிவது மிக வும் அவசியமாகும்" என்றார்.

நிர்வாக இயக்குனரும், தலைமை சிறுநீ ரக மருத்துவரும், ரோபோடிக் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் அருண் குமார் பாலகிருஷ்ணன் கூறுகையில், "சிறு நீரக நோய்க்குச் சிகிச்சையளிப்பது மட்டு மல்லாமல், விழிப்புணர்வு மற்றும் முன் கூட்டியே கண்டறிவதன் மூலம் அதனைத் தடுப்பதே எங்கள் மருத்துவமனையின் நோக்கமாகும். மாறிவரும் வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்க ளால், உயர்ரத்தஅழுத்தம்மற்றும்சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. உலக சிறுநீரக தினத்திற்கான இந்த முயற்சி, குறிப்பாக 30 வயதுக்கு மேற் பட்டவர்கள் பரிசோதனை செய்து, தங்க ளுக்கு உள்ள உடல்நல பிரச்சினைகளை முன்கூட்டியே புரிந்துகொள்ள ஊக்குவிக் கிறது. அதிக உப்பை உட்கொள்வதால் ஏற் படும்ஆபத்துகள்பற்றியவிழிப்புணர்வைப் ஏற்படுத்துவதன் மூலமும், தடுப்பு சிகிச் சைகளை ஊக்குவிப்பதன் மூலமும், ஆரோக்கியமானசமுதாயத்தைஉருவாக்கி, சிறுநீரக நோயின் பாதிப்பை வெகுவாகக் குறைக்க முடியும் என நாங்கள் நம்புகி றோம்" என்று தெரிவித்தார்.

இந்தப் பிரச்சாரத்தின் மூலம், வாழ்க்கை முறை மாற்றங்களை ஊக்குவிக்கவும், நோயை முன்கூட்டியே கண்டறியவும், நீண்டகால சிறுநீரகப் பாதிப்புகளைத் தடுக் கவும் இம்மருத்துவமனை திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, மருத்துவமனையானது 'பிரத் யேக உயர் ரத்த அழுத்த கிளினிக்'மூலம் பொதுமக்களைச் சென்றடையும் பணி யைத் தீவிரப்படுத்தும். இது தனிநபர்கள் தங்கள் ஆபத்துகளை முன்கூட்டியே கண் டறிந்து, சரிசெய்ய முடியாத சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பாகவே உரிய மருத்துவச் சிகிச்சையைப் பெற உதவும்.

விழிப்புணர்வு, மருத்துவப் பரிசோதனை மற்றும் சிறப்புச் சிகிச்சை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம், மக்கள் தங்கள் சிறுநீரக ஆரோக்கியத்தைத் தாங்களே பாது காத்துக்கொள்ளவும், சமூகத்தில் அதிக ரித்து வரும் சிறுநீரக நோயின் பாதிப்பை குறைப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த பிரச்சாரத்தை ஏஐஎன்யு மருத்துவமனை துவக்கி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸின் ஷீதாரா 2026' பெண் முகவர்களுக்கான சிறப்பு இலவச மருத்துவ முகாம்



ஸ்டார் ஹெல்த் இன்சூ ரன்ஸ் நிறுவனத்தின் ஷீதாரா 2026' பெண் முக வர்களுக்கான சிறப்பு இலவசமருத்துவமுகாம் ஸ்டார் ஹெல்த் அண்டு அலைய்ட் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் நிறு வனம் சார்பில் 'ஷீதாரா 2026' 2 ஆம் ஆண்டு கொண்டாட்டத்துடன் இணைந்து பெண் முகவர்கள், முகவர்களின் துணைவியர்கள், மகள்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான சிறப்பு இலவச மருத்துவ முகாம் சென்னை மண்டலத்தில் நடத்தப்பட் டது.

இந்த நிகழ்ச்சி சென்னை கோடம்பாக் கம், அண்ணாநகர் கிளை அலுவலகங்க ளில் ஒரே நேரத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு வணிகத் தலைவர் பாலாஜி பாபு அவர்களின் மேற்பார்வையிலும் முன்னெடுப்பிலும் உருவான ஒரு சிறப் பான முயற்சியே 'ஷீதாரா'. தமிழ்நாடு முழுவதும் நிறுவனத்தின் செயல்பாடு களை முன்னின்று வழிநடத்தி வரும் அவர் ₹2,400 கோடிக்கு மேற்பட்ட வணி கத்தை மேலாண்மை செய்து வருகிறார். அவரின் தலைமையில் ஸ்டார் ஹெல்த் நிறுவனம் தமிழ்நாடு பகுதிகளில் ₹1,500 கோடி மற்றும் சென்னை மண்டலத்தில் ₹500 கோடி மதிப்பிலான க்ளெயிம் தொகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சியை பிரைம் இந்தியன் ஹாஸ்பிடல்ஸ் நிறுவனத்தின் மூத்த மகப்பேறு நிபுணர் டாக்டர் சித்ரா பாஸ் கர், கன்சல்டன்ட் சர்ஜிக்கல் காஸ்ட்ரோ என்டரோலஜிஸ்ட் டாக்டர்ஆர். கண் ணன், பரம்பரா ஃபெர்டிலிட்டி & கைய் னிக் சென்டர் நிர்வாக இயக்குநர் டாக்டர் ராதிகா மேகா, ஸ்பார்டன் குழுமப் பள்ளிகளின் தாளாளர் சாரா அலெக் ஸாண்டர், பெரம்பூர்மினி டெமரீஸ் நிறு வன உரிமையாளர் சுஜாதா மதுரம் ஆகி யோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் அவர்கள் பெண்களின் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வை வலியுறுத்தியதுடன், சமூகத்தில் பெண் கள் பெற்றோர், வாழ்க்கைத் துணை, இல் லத்தரசி, தொழில்முனைவோர் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிப்பாளர் கள் என பல்வேறு பங்குகளை வகிப் பதை எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சென்னை 1மண்டல தலைவர் சையத் இம்ரான் ஏ, சென்னை 2 மண்டல தலை வர் அருளேசன், ரீஜினல் க்ளெயிம் தலை வர் டாக்டர் ரம்யா தேவி மற்றும் மண்டல க்ளெயிம் தலைவர் டாக்டர் டாப்னி கெத்சி பென்னிட்டா ஆகியோர் பெண் முகவர்களின் அர்ப்பணிப்பான பணியை பாராட்டி, வாடிக்கையாளர்களுக்கு காப் பீடு சேவைகள் மற்றும் க்ளெயிம் தீர்வுக ளில் அவர்கள் வழங்கும் முக்கிய பங்க ளிப்பை பாராட்டினர்.

இந்த நிகழ்ச்சி ஏரியா மேனேஜர்கள் செந்தில், பாபு பழனி, ஸ்ரீநிவாஸ் ராவ் மற்றும் சிவகுமார் ஆகியோரின் ஒருங்கி ணைப்பில், சென்னை1 மற்றும் சென்னை 2 மண்டல ஸ்டார் ஹெல்த் குழுவினரால், பிரைம் இந்தியன் ஹாஸ்பிடல்ஸ், ஏ4 ஹாஸ்பிடல்ஸ், ஆர்.பி எஸ் ஹாஸ்பி டல்ஸ் மற்றும் வாசன் ஐ கேர் ஆகிய நிறு வனங்களுடன் இணைந்து நடத்தப்பட் டது.

இந்த மருத்துவ முகாமின் ஒரு பகுதி யாக ஒருவருக்கு சுமார் ₹4,000 மதிப்பி லான மருத்துவ பரிசோதனைகள் இலவ சமாகவழங்கப்பட்டுசுமார்500பெண்கள் பயனடைந்தனர்.

மேலும் பெண் முகவர்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக் கும் பல புதிய முயற்சிகள் வரவிருக்கும் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும் எனஸ்டார்ஹெல்த்நிறுவனபிரதிநிதிகள் தெரிவித்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066